# ஞானாசாரியர் கல்லூரி
# கரவெட்டி.

# வருடாந்த
# பரிசளிப்பு விழா -2017

காலம் : 2017.06.30 வெள்ளிக்கிழமை

பி.ப. 2.30 மணி

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

தலைவர்

திரு.கந்தசாமி கண்ணன்(அதிபர்)

பிரதம விருந்தினர்

கௌரவ. தர்மலிங்கம் சித்தார்த்தன்

(பாராளுமன்ற உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்

வைத்திய கலாநிதி.

திரு.பாலசுப்பிரமணியம் பிரபாகரன் (B.S.M.S)

மருத்துவ பொறுப்பதிகாரி (MOIC)

மத்திய சித்தமருந்தகம் (C.S.D)

பாடசாலைச்சமூகம்

# நிகழ்ச்சி நிரல்

02.30 விருந்தினர் வரவேற்பு

02.40 மங்கல விளக்கேற்றல்

02.45 இறை வணக்கம்.

02.50 தமிழ்மொழி வாழ்த்து

02.55 ஆசியுரை - சிதம்பரக் குருக்கள்

03.00 வரவேற்பு நடனம்

03.05 வரவேற்புரை - **திரு.வ.வசந்தகுமார்**

03.10 அதிபர் அறிக்கை **திரு.க.கண்ணன்**

03.30 சிறப்பு விருந்தினர் உரை

**வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் பிரபாகரன்**

மருத்துவ பொறுப்பதிகாரி, மத்திய சித்தமருந்தகம், பருத்தித்துறை

03.40 பிரதம விருந்தினர்உரை

**கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன்**

பாராளுமன்ற உறுப்பினர்.

04.00 பரிசில் வழங்கல்

05.00 கலைநிகழ்ச்சிகள்

06.00 நன்றியுரை திருமதி ரா.சுஜீவன்குலாஸ்

06.05 பாடசாலை கீதம்

# யா/ஞானாசாரியார் கல்லூரியின் பரிசில் தின விழா அதிபர் அறிக்கை 2017

இவ் விழாவிற்குப் பிரதமவிருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்வித்துக்கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களே, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து இவ் விழாவினைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையினுடைய பழைய மாணவன் வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியம் பிரபாகரன் அவர்களே, வலயக்கல்விப் பணிமனையிலிருந்து வருகைதந்திருக்கின்ற பிரதிநிதிகளே, முன்னாள் அதிபர்களே, அயற்பாடசாலையின் அதிபர்களே, ஆசிரிய நண்பர்களே, கல்விசாரா ஊழியர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, மாணவத் தலைவர்களே, எமது அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது அன்பான இனிய வணக்கங்கள்.

யாழ் வடமராட்சிப் பகுதியில் கட்டைவேலி கோயிற்பற்றில் துன்னாலை மேற்கு கரவெட்டியில் அமைந்த சைவப்பாரம்பரியம் மிக்க கல்லூரியாக யா/ஞானாசாரியார் கல்லூரி விளங்குகிறது. ஞானவைரவரின் அருளாட்சியோடு தளர்வுகளையெல்லாம் புறந்தள்ளி வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் இக்கல்லூரியின் 2017ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா அறிக்கையை வாசிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழாவிற்கு எவ்வளவோ வேலைப்பளுக்களின் மத்தியிலும் எமது குறுகிய கால அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்ட காலமான அரசியல் பின்புலத்திலிருந்து முளைத்தெழுந்த ஒரு அரசியல் தலைவர். இவருடைய தந்தை தமிழர்களின் அரசியல் வரலாற்றில் என்றும் அழிந்து போகாத அரசியல் தலைவர். அவர் காட்டிய அரசியல் வழியில் தனையனும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவர் பாராளுமன்றததில் கதிரைகளில் அமரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அச்சந்தர்ப்பங்களை தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெரும் பணியாற்றுவதற்கே அக்காலத்தைப் பயன்படுத்தி வருகின்றார். இன்றும் பல்வேறு அரசியல் பணிகளில் மட்டுமன்றி அபிவிருத்திப் பணிகளிலும் பல்வேறு மட்டங்களில் ஈடுபட்டுவருகின்றார். இத்தகைய பெருமைக்குரிய மூத்தஅரசியல் தலைவரை எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவிப்பதில் புளகாங்கிதமடைகினறோம்.

சிறப்பு விருந்தினராக இப்பாடசாலையில் தரம்1 முதல் க.பொ.த (சா/த) வரை கற்று வைத்தியக் கலாநிதியாகி பருத்தித்துறை மத்திய சித்த மருந்தகத்தின் மருத்துவப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருப்பவரும் எமது பாடசாலையின் பழைய மாணவன் ஒருவரை இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கௌரவிப்பதில் எமது கல்லூரித்தாய் மகிழ்வடைகிறாள்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 82 வருடங்களாக பல்வேறு சவால்களின் மத்தியிலும் எமது பாடசாலை பல சாதனைகளை நிகழ்த்தி வடமராட்சியில் தனது பெயரை நிலைநிறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடங்கள் குறிப்பாக 2015,2016க்குமுரிய காலப்பகுதிகளுக்குரிய பரிசளிப்பு நிகழ்வாக இவ்வருடம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

எமதுகல்லூரியின் இயலளவு சாதனைகளை நோக்குவோமாயின் கல்விசார் செயறபாட்டின் 2015க்குரிய க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் எமது மாணவர்கள் ஆறு பேர் சிறந்த பெறுபேற்றை பெற்று உயர்தர வகுப்பில் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

உயர்தரப் பரீட்சையில் 2015ஆம் ஆண்டு இரண்டு மாணவர்கள் பல்கலைக்கழக தகுதியைப் பெற்றிருந்தனர். அ.கீர்த்திகா 2A,B சித்தியையும் மு.பானுசா A,B,C சித்தியையும் பெற்று பாராட்டைப்பெறுகின்றனர். இம்மாணவிகள் கலைத்துறையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்தனர். மேலும் 4பேர்100 புள்ளிக்கு மேல் பெற்று தமது திறமையை வெளிப்படுத்தினர். இவர்களைக் கற்பித்த ஆசிரியரான திருமதி பாலநந்தினி மகேந்திரம் அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

2016ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் எமது மாணவர்கள் 14 பேர் சிறந்த பெறுபேற்றை பெற்று உயர்தரவகுப்பில் கற்பதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். 8A,B ஸ்ரீரம்மியா அவர்களும் 8A,C யினைப் பெற்ற அபிதனும் அதி சிறந்த பெறுபேற்றைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உயர்தரப் பரீட்சையில் 2016ஆம் ஆண்டு ஒரு மாணவி பல்கலைக்கழக தகுதியைப் பெற்றிருந்தனர். மு.விமலரூகினி 2A,B

சித்தியைப் பெற்று பாராட்டைப்பெறுகின்றார். இம்மாணவி கலைத்துறையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளார். இவரை நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 6பேர் 100புள்ளிகளைப்பெற்று தமது திறமையை வெளிப்படுத்தினர்.இவர்களைக் கற்பித்த ஆசிரியரான செல்வி விமலாதேவி அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

2016 ஆம் ஆண்டு நீளம் பாய்தல் போட்டியில் வலயம், மாகாணமட்டத்தில் இரண்டாம் இடங்களைப் பெற்று க.ஜசிந்தன் தேசிய மட்டத்தில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தினப்போட்டிகளிலும், ஆங்கிலதினப்போட்டிகளிலும், கோட்டமட்ட ,வலய மட்டப் பரிசில்களையும் எமது மாணவர்கள் பெற்றுக் கொண்டதுடன் பிரிவு 5 திறனாய்வுப் போட்டியில் வலயமட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று செல்வி வ.பிரியங்கா மாகாணமட்டத்தில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது கல்லுர்ரியில் ஒரு சிறந்த சாரணிய அமைப்பு சிறப்பாகச் செயற்பாட்டு ஆலயப் பணிகளிலும் கரவெட்டி பிரதேச வைத்தியசாலை சிரமதானப் பணிகளிலும் அது பெரும்பங்காற்றுகின்றது.

எமது கல்லூரி மாணவர்கள் பல்வேறு பொது நிறுவன திணைக்களங்களால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இவ்வகையில் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேசமுதியோர்தினப்போட்டி , சர்வதேசசிறுவர்தினப்போட்டிகளில் பங்குபற்றி எமது மாணவர்கள் பல்வேறு பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

எமது பாடசாலையின் வாணிவிழா கலைநிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றதுடன் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பழமை வாய்ந்த எமது பாடசாலையின் பிரதான மண்டபத்தினைத் திருத்தம் செய்வதற்கான கேள்வியினைக் கோரியிருந்தபோது எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் உலகெங்கும் பரந்தும் விரிந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் முன்வந்து அம் மண்டபத்தினை நவீன காலத்திற்கமைவாக திருத்தம் செய்தும், நிலத்துக்கு ரராசோ பதித்தும் தந்த செயலை உள்ளன்போடு பாராட்டுகின்றோம். பாடசாலையின் அலுவலக வேலைகளை ஆற்றுவதற்காக விஞ்ஞான ஆய்வுகூடத்தினை மின்விசிறி, சிங் போன்றவசதிகளுடன் கூடிய கவின்நிலையுடைய அலுவலக அறையாக மாற்றுவதற்கும் நிதியுதவி வழங்கிய பழைய மாணவர்களுக்கும் அதை அமைத்துத்தந்த பழைய மாணவர்சங்க பிரதிநிதிகளுக்கும் என்னென்றும்

எமது நன்றிகள். குறிப்பாக பழைய மாணவர் சங்கத்தலைவர் வே.சிவசிதம்பரம் செயலாளர் கந்தசாமி மகிந்தன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

எமது பாடசாலையின் வறிய மாணவர்களுக்கு சிவன் பவுண்டேசன் நிறுவன்தினர் மற்றும் கரவெட்டி பிரதேச செயலகம் சப்பாத்து வழங்கியமையமைக்கும் எமது உள்ளார்ந்த நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கென ஓர் நிதியத்தை வழங்கிய திருமதி வினோத் லோஜினி தம்பதியினரையும் ஆசிரியர் திருமதி வனிதா குமரேசமூர்த்தியையும் பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு.சி.சிறீராமச்சந்திரன்அவர்களையும் நான் மீண்டும் இவ்வேளையில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலையின் பான்ட் குழுவினருக்கு தொப்பிகளை தந்துதவிய செல்வி சி.உதயரஞ்சினி அவர்களை நன்றியுடன் பாராட்டுகின்றேன். மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கு நிதி உதவிவழங்கிவரும் முன்னால் பிரதி அதிபர் திருமதி ந.சிவபாலன் அவர்களையும் இவ்வேளையில் நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் வருடந்தோறும் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு சமூகச்சுடர் பாஸ்கரன் அவர்களின் நிதியத்தால் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் வறிய மாணவர்களுக்கு ரூ.100 வீதம் 20 மாணவர்களுக்கு மாதாந்த உதவிதொகை வழங்கி வருகின்றார்.இவ்வகையில் அவரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன்.

மேலும் முன்னாள் ஆசிரியர் கந்தையா பத்தினிப்பிள்ளையின் ஞாபகார்த்த நிதி க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு உதவுதொகையினை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. திரு. திருமதி. தம்பிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக திருமதி மகேந்திரா அவர்களின் நிதி க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவருக்கு வழங்கப்படுகின்றது.

மேலும் கரவெட்டி ஒன்றியத்தினர் எமது பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்வதற்கு நிதி உதவி வழங்கி வருகின்றார். அவர்களையும் இந்நேரத்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலை வளவை துப்புரவு செய்து தந்த சமுர்த்திப் பயனாளிகளையும் அவர்களை நெறிப்படுத்திய துன்னாலை மேற்கு சமுர்த்திஉத்தியோகத்தர்அவர்களுக்கும்நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

~~இத்துடன் எனது அறிக்கையை நிறைவு செய்கிறேன்.~~

நன்றி.

# ஆசிரியர் ஆளணிக் கட்டமைப்பு

| | |
|---|---|
| அதிபர் | திரு க.கண்ணன் |
| பிரதி அதிபர் | திரு வ.வசந்தகுமார் |

**ஆசிரிய வளம்**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 33 |
| நிரந்தர ஆசிரியர் எண்ணிக்கை | 31 |

**கல்விசாரா ஊழியர்கள்**

| | |
|---|---|
| பாடசாலை காவலாளி | 01 |
| அலுவலகப்பணியாளர் | 01 |
| சுகாதாரப் பணியாளர் | 01 |

**பற்றாக்குறை**

| | |
|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |

## கடமையாற்றும் ஆசிரியர்கள்

01.திருமதி.இளநங்கை சிவகரன்
02.செல்வி.விமலாதேவி வல்லிபுரம்
03.திருமதி.பிரபாளினி டேவிட்ராஜ்
04.திரு. தாமோதரம் குணசேகரம்
05.திருமதி. சுமதி குலேந்திரம்
06.திருமதி. பாலநந்தினி மகேந்திரன்
07.திருமதி. சாந்தமலர் குகநேசன்
08.திருமதி.ஜமுனா ஜெயநாதன்
09.திரு. வல்லிபுரம் விக்னேஸ்வரன்
10.திருமதி. சாந்தகுமாரி இராகவன்
11.திருமதி. ஜசிந்தா விஜயகுமார்
12.திரு.கதிரமலை செந்தூரன்
13.திரு. குமாரசாமி மதியழகன்
14.திருமதி இந்துமதி செல்வராசா

15.திரு.கிருஸ்ணபிள்ளை அம்பிக்குமார்
16.திருமதி.ராதா மனில் சஜீவன் குலாஸ்
17.திருமதி. செல்வராணி சுந்தரலிங்கம்
18.திருமதி. காந்தரூபி சிறி
19.திருமதி. சியாமிளா இராமச்சந்திரன்
20.திருமதி. சிவமாலா பவானந்தன்
21.திருமதி. ஜெயவாணி நகுலேந்திரன்
22.திருமதி. பராசக்தி தயேந்திரன்
23.திருமதி ஞானசோதி நல்லநாதன்
24.திருமதி. மதிவதனி கோபிநாத்
25.திருமதி. யோகாம்பிகை இராஜகோபால்
26.திரு. வைரமுத்து சிவநடராஜா
27.திருமதி. ஸ்ரீவிமலகாந்தன் ஜெயசிறி
28.திருமதி. இராசகுமாரி செல்வநாயகம்
29.திரு. நாகரத்தினஐயர் கலாதரன்
30.செல்வி.பகவதி விநாயகமூர்த்தி
31.திருமதி.கிரிஜா கேசவமூர்த்தி

**ஆசிரிய நூலகர்**

திருமதி. ஜெயவாணி நகுலேந்திரன்

**பாடசாலை அலுவலக உதவியாளர்**

திரு.சி. உதயகுமார்

**பாடசாலை சுகாதார ஊழியர்**
திருமதி. அபிராமி சதீஸ்குமார்

**பாடசாலை காவலாளி**
திரு. சிவகுரு பிரதீபன்

**இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்/ஆசிரியர்கள்**

1. திரு.பரஞ்சோதி செல்வவிநாயகம் (அதிபர்)
2. திரு.கந்தசாமி ஸ்ரீசந்திரன்
3. திரு.இராமகிருஸ்ணன் சிறீனிவாசன்
4. திரு.ஆறுமுகம் சுதர்சன்
5. திரு.இரத்தினசபாபதி சுரேஸ்குமார்
6. திருமதி.சுதர்சனா சிவரஞ்சன்
7. திரு.யுத்திசிகாமணி பகீரதன்

## மாணவர் விபரம்

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பம் | 24 | 25 | 49 |
| இடைநிலை | 101 | 82 | 183 |
| உயர்தரம் | 10 | 10 | 20 |
| மொத்தம் | 135 | 117 | 252 |

## மன்றங்கள்

1. உயர்தர மாணவர் மன்றம்
2. மாணவர் தமிழ் மன்றம்
3. இந்து மாமன்றம்
4. இளம் புத்தாக்குநர் கழகம்
5. சுகாதாரக் கழகம்
6. ஆங்கில மன்றம்
7. சதுரங்க கழகம்
8. சாரணர் துருப்பு
9. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
10. பழைய மாணவர் சங்கம்
11. சுற்றாடல் முன்னோடிக் கழகம்
12. மாணவர் பாராளுமன்றம்.

ஆகிய மன்றங்கள், சங்கங்கள் மாணவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும், கல்லூரியின் அபிவிருத்திக்கும் உறுதுணையாக நின்று செயற்படுகின்றன.

## நன்றிகள்.

01. எமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவுக்கென நிதியத்தை ஏற்படுத்தித்தந்த திரு. திருமதி. வினோத் நிலோஜினி தம்பதியினருக்கும் அதனைஏற்படுத்த வழிசெய்த திருமதி. வ.குமரேசமூர்த்தி ஆசிரியருக்கும் பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு.சி.சிறீராமச்சந்திரன் அவர்களுக்கும்

02. கந்தையா பத்தினிப்பிள்ளை புலமைப்பரிசில் நிதியத்தை ஏற்படுத்தித் தந்த திரு.திருமதி குணபாலசுப்பிரமணியம் அவர்களுக்கும்,

03. பெயர் குறிப்பிட முன்வராத அமரத்துவமடைந்த எமது கல்லூரியின் பழைய மாணவிக்கும்,

04. க.பொ.த(சா/த) சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்களுக்காக அதிபர் வ.தம்பிப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியத்தை ஏற்படுத்தித் தந்த அன்னாரது குடும்பத்தவர்கட்கும்,

05. எமது கல்லூரிக்கு பல வழிகளிலும் உதவுகின்ற பழைய மாணவர்களுக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும்,

06. புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கிய ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி. ந.சிவபாலன் அவர்களுக்கும் பதக்கங்களை வழங்கிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கும்

07. புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ1000 வழங்கும் லண்டனில் வசிக்கும் மு. கிருஸ்ணபிள்ளை அவர்களுக்கும்

08. புலமைப்பரிசில் பரீட்சையில் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு சகல வழிகளிலும் ஆலோசனைகள் தந்துதவுகின்ற வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்கட்கும் மற்றும் திணைக்கள அதிகாரிகட்கும்,

09. எமது தேவை கருதி உதவி செய்கின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10. இன்றைய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கட்கும், சிறப்பு விருந்தினரான எமது

மதிப்பிற்குரிய எமது பாடசாலையின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் பிரபாகரன் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

11 எமது தேவை கருதி பல வழிகளிலும் உதவி வழங்குகின்ற அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிற்கும் அவற்றில் கடமையாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இப் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்திகளையும் முன்னேற்றத்திற்காகவும் என்னால் முடிந்த வரையில் உதவி செய்வேன் எனக் கூறி ~~இத்துடன்~~ இவ் அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

# 2015 இல் பரிசில் பெறுவோர்

## தரம் 1

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ்,கணிதம், சமயம், சுற்றாடல் - | ர.திவர்ணா |

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ர.திவர்ணா
2. சி.காவேரி
3. தீ.தினுஜன்

## தரம் 2

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. தமிழ் | க.கனுஜா |
| 2. கணிதம், சுற்றாடல் | வி.வித்தகி |
| 3. சமயம் | சி.தர்சிகா |

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. வி.வித்தகி
2. சி.தர்சிகா
3. க.கனுஜா

## தரம் 3

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. தமிழ்,சமயம்,சுற்றாடல் | ரா.சாரங்கா |
| 2. கணிதம், ஆங்கிலம் | ம.டிலக்சி |

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ம.டிலக்சி
2. ரா.சாரங்கா
3. தே.அபினேஸ்

# தரம் 4

பாடம் மாணவர் பெயர்

தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் க.மதுசன்

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. க.மதுசன்
2. ஸ்ரீ.ஸ்ரீசஞ்சயன்
3. இ.அபிசா

# தரம் 5

பாடம் மாணவர் பெயர்

1. தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் - இ.ஆரணி
2. கணிதம் - இ.ஆரணி, தே.அபிர்னா

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. இ.ஆரணி
2. தே.அபிர்னா
3. ர.ரம்சியா

# தரம் 6

பாடம் மாணவர் பெயர்

1. தமிழ், ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், சங்கீதம் சி.சயேக்கா
2. சைவசமயம். விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சி, பிரயோகத்தொழில் நுட்பம் வி.விசாகன்
3. சித்திரம் ர.ராகவன்

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. வி.விசாகன்
2. சி.சயேக்கா
3. பி.பிருந்தன்

## தரம் 7

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. தமிழ், ஆங்கிலம்,கணிதம், விஞ்ஞானம், புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சி சித்திரம், பிரயோகத்தொழில்நுட்பம் | ம.அபிநாத் |
| 2. சைவசமயம்,சங்கீதம் சுகாதாரமும் உடற்கல்வியும், வரலாறு | து.சுவர்ணா |

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. து.சுவர்ணா
2. ம.அபிநாத்
3. சு.நிதர்சன்

## தரம் 8

| | |
|---|---|
| 1. தமிழ் கிறிஸ்தவம்,கணிதம்,விஞ்ஞானம் வரலாறு, புவியியல், வா.தேர்ச்சி | சை.செரின் |
| 2. சுகாதாரமும் உடற்கல்வியும்,சைவம், சங்கீதம், பிரயோக தொழினுட்பம் | ர.காருண்ஜன் |
| 3.நடனம் | சி.துசானிக்கா |

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. சை.செரின்
2. ர.காருண்ஜன்
3. த.அபிநயா

## தரம் 9

| | |
|---|---|
| 1. தமிழ்,சைவம்,ஆங்கிலம்,கணிதம்,விஞ்ஞானம் புவியியல்,வரலாறு,பிரயோக தொழினுட்பம் சுகாதாரமும் உடற்கல்வியும | த.வராகன் |
| 2. வாழ்க்கைத்தேர்ச்சி, நடனம் | ர.ரணுஜா |
| 3. சித்திரம் | ந.கஜீபன் |
| 4. சங்கீதம் | ம.அபிநயா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. த.வராகன்
2. ர.ரணுஜா
3. து.துசாந்தினி

## தரம் 10

1. தமிழ்.சமயம்,கணிதம்,ஆங்கிலம்,வரலாறு,விஞ்ஞானம் வர்த்தகம்,தமிழ் இலக்கியநயம்,ICT — ஸ்ரீ.ஸ்ரீரம்மி
2. புவியியல் — மு.அபிதன்
3. சங்கீதம்,விவசாயம் — அ.பிரவீன்
4. .நடனம் — சி.லக்சிகா

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ஸ்ரீ.ஸ்ரீரம்யா .
2. மு.அபிதன்
3. அ.பிரவீன்

## தரம் 11

1. தமிழ்,சமயம்,கணிதம்,ஆங்கிலம், வரலாறு சங்கீதம், வர்த்தகம், ICT,விஞ்ஞானம் — த.தயாபரி
2. சுகாதாரம், தமிழ் இலக்கிய நயம் — சி.மதுசா
3. நடனம் — க.விதுசா
4. விவசாயம்,புவியியல் — ப.துஷ்யந்தன்

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. த.தயாபரி
2. ப.துஷ்யந்தன்
3. சி.மதுசா

## தரம் 13

1. தமிழ், அளவையியல்,இந்துநாகரிகம் — மு.விமலரூகினி
2. புவியியல் — வ.நந்தினி
3. நடனம் — செ.சர்மிளா

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

மு.விமலரூகினி

# 2016 இல் பரிசில் பெறுவோர்

## தரம் 1

. தமிழ்,கணிதம், சமயம், சுற்றாடல் - க.மதுசனா

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. க.மதுசனா
2. சி.விசாகி
3. த.தவரூபன்

## தரம் 2

. தமிழ்,கணிதம், சமயம், சுற்றாடல் - சி.காவேரி

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. சி.காவேரி
2. ர.திவர்ணா
3. தீ.தினுஜன்

## தரம் 3

. தமிழ்,கணிதம், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் - வி.வித்தகி

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. வி.வித்தகி
2. சி.தர்சிகா
3. க.கனுஜா

## தரம் 4

. தமிழ்,கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் - ம.டிலக்சி

சமயம் - ரா.சாரங்கா

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ம.டிலக்சி
2. ரா.சாரங்கா
3. தே.அபினேஸ்

## தரம் 5

. தமிழ்,கணிதம், சுற்றாடல், சமயம் - க.மதுசன்

ஆங்கிலம் - ஸ்ரீ.ஸ்ரீசஞ்சயன்

### மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. க.மதுசன்
2. ஸ்ரீ.ஸ்ரீசஞ்சயன
3. இ.அபிசா

## தரம் 6

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. தமிழ், சமயம்,ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் சங்கீதம், வாழ்க்கைத்தேர்ச்சி சுகாதாரமும் உடற்கல்வியும், பிரயோகத்தொழில்நுட்பம் | ர.ரம்சியா |
| 2. கிறிஸ்தவம் | ர.டிலக்சன் |
| 3. கணிதம், சித்திரம் | மு.ஆதித்தியா |
| 4. நடனம் | சு.வானுஜா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ர.ரம்சியா
2. மு.ஆதித்தியன்
3. சு.வானுஜா

## தரம் 7

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. தமிழ், ஆங்கிலம், சங்கீதம், குடியியல் சுகாதாரமும் உடற்கல்வியும், பிரயோகத்தொழில்நுட்பம் | சி.சயேக்கா |

2. கிறிஸ்தவம் - ம.மதுசன்

3. கணிதம், விஞ்ஞானம், வரலாறு - வி.விசாகன்

4. நடனம்,சமயம், புவியியல் - சி.சுலக்சனா

5. சித்திரம் - ர.ராகவன்

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. சி.சயேக்கா
2. சி.சுலக்சனா
3. வி.விசாகன்

## தரம் 8

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. சமயம்,தமிழ்,ஆங்கிலம், வரலாறு,புவியியல் வாழ்க்கைத்தேர்ச்சி | து.சுவர்ணா |
| 2. கணிதம், விஞ்ஞானம்,சித்திரம், செ.மு.தொழில்நுட்பம், சுகாதாரம் | ம.அபிநாத் |
| 3. கிறிஸ்தவம் | த.மதுசன் |
| 4. நடனம் | க.கஜீனா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. து.சுவர்ணா
2. ம.அபிநாத்
3. சு.நிதர்சன்

## தரம் 9

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. கிறிஸ்தவம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் கணிதம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சி, சங்கீதம் | சை.செரின் |
| 2 சமயம், பி.தொ.நுட்பம், சுகாதாரம் | ர.காருண்யன் |
| 2. சித்திரம் | த.தசிமோகன் |
| 3. நடனம் | ரி.நிந்துஜா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. சை.செரின்
2. ர.காருண்யன்
3. ரி.அபிநயா

## தரம் 10

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. சைவசமயம், தமிழ், வரலாறு, தமிழ் இலக்கியநயம், வணிகம் | ர.ரஜனுஜா |
| 2. கணிதம், ஆங்கிலம்,வணிகம், I.C.T | த.வராகன் |
| 3. சங்கீதம், சுகாதாரம் | ம.அபிநயா |
| 4. சங்கீதம் | து.துசாந்தினி |
| 5. புவியியல் | ந.கஜீபன் |
| 6. சித்திரம் | செ.சுபாகர் |
| 7. நடனம் | ச.சாருஜா |
| 8. விவசாயம் | ம.ஆர்த்திகா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. த.வராகன்
2. ர.ரஜனுஜா
3. து.துசாந்தினி

## தரம் 11

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| 1. சமயம்,தமிழ்,கணிதம்,ஆங்கிலம், வரலாறு, விஞ்ஞானம்,வர்த்தகம், I.C.T | ஸ்ரீ.ஸ்ரீரம்யா |
| 2. புவியியல், தமிழ் இலக்கியநயம் | மு.அபிதன் |
| 3. சங்கீதம் | இ.தர்சினி |
| 4. சித்திரம் | த.கண்ணன் |
| 5. விவசாயம் | கு.குமிதா |
| 6. நடனம் | சி.லக்சிகா |

மொத்தப் புள்ளியின் அடிப்படையில்

1. ஸ்ரீ.ஸ்ரீரம்யா
2. மு.அபிதன்
3. கு.குமிதா

## தரம் 12 வர்த்தகம்

| பாடம் | மாணவர் பெயர் |
| --- | --- |
| வர்த்தகம்,பொருளியல், கணக்கியல் | க.ஜசிந்தன் |

# சிறப்புப் பரிசில்கள் பெறுவோர் விபரம் 2015

க.பொ.த(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று அதிபர் வ.தம்பிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி பெறுபவர். 2015ம் ஆண்டு - செல்வி த.தயாபரி

க.பொ.த(உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று நெல்லியடியைச் சேர்ந்த தொழிலதிபர் ந.பாஸ்கரன் அவர்களின் புலமைப் பரிசில் நிதி பெறுபவர். செல்வி. அ.கீர்த்திகா

கந்தையா பத்தினிப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி பெறுவோர்.

செல்வி கு. சரண்யா
செல்வி மு.சஞ்சிகா
செல்வி சி.ஜசிந்தா

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாடசாலையால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதி பெறுவோர்.

செல்வன். க. நிதர்சன்
செல்வன். த. வராகன்
செல்வி. ஸ்ரீ. ஸ்ரீரம்யா
செல்வன். இ. ரஜீகரன்
செல்வன். சி. சிந்துஜன்

க.பொ.த(சா/த) பரீட்சை - 2015

தோற்றிய மாணவர் - 17
க.பொ.த(உ/த) தகுதி பெற்றோர் - 06
சிறந்த பெறுபேறு - 3A,3B,3C செல்வி.த.தயாபரி

க.பொ.த(உ/த) பரீட்சை - 2015

தோற்றிய மாணவர் :- கலை - 09
:- வர்த்தகம் - 03

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்
கலை - 02

சிறந்த பெறுபேறு
கலை - 2A,B - அ.கீர்த்திகா

# சிறப்புப் பரிசில்கள் பெறுவோர் விபரம் 2016

க.பொ.த(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று அதிபர் வ.தம்பிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதி பெறுபவர்.
2016ம் ஆண்டு - செல்வி ஸ்ரீ.ஸ்ரீரம்யா -8A,B

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி ஜசிந்தா விஜயகுமாரன் அவர்களால் வழங்கப்படும் பரிசினைப் பெறுபவர்
செல்வன் மு.அபிதன் - 8A,C

க.பொ.த(உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று நெல்லியடியைச் சேர்ந்த தொழிலதிபர் ந.பாஸ்கரன் அவர்களின் புலமைப் பரிசில் நிதி பெறுபவர்.
செல்வி. மு.விமலரூகினி

புலமைப்பரிசில் 100 புள்ளிக்கு மேல் பெற்று ஞானம்ஸ் கழகம் வழங்கும் பதக்கம் பெறுவோர்
செல்வி.அ.அபிசா
செல்வன்.ஆ.கரிகரன்
செல்வன். செ.செந்துஜன்
செல்வன்.ஸ்ரீ.ஸ்ரீசஞ்சயன்
செல்வன். க.கோகிசாத்
செல்வன்.க.மதுசன்

புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று திருமதி. ந.சிவபாலனின் பரிசை பெறுவோர்
செல்வி.அ.அபிசா
செல்வன்.ஆ.கரிகரன்

செல்வன். செ.செந்துஜன்
செல்வன்.ஸ்ரீ.ஸ்ரீசஞ்சயன்
செல்வன். க.கோகிசாத்
செல்வன்.க.மதுசன்

க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்திபெற்று தொடர்ந்து எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வினோத் நிலோஜினி தம்பதிகளின் நிதியுதவியினைப் பெறுவோர்.
செல்வி.ஸ்ரீ.ஸ்ரீரம்யா
செல்வி.கு.குமிதா
செல்வி.சி.கஸ்தூரி
செல்வி.இ.தர்சினி
செல்வி.சி.சிலர்சனா
செல்வன்.அ.ஆகாஸ்

## க.பொ.த(சா/த) பரீட்சை - 2016

தோற்றிய மாணவர் - 32
க.பொ.த(உ/த) தகுதி பெற்றோர் - 10
சிறந்த பெறுபேறு - 8A,B செல்வி.ஸ்ரீ.ஸ்ரீரம்யா

## க.பொ.த(உ/த) பரீட்சை - 2016

தோற்றிய மாணவர் :- கலை - 07

## பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்

கலை - 01

## சிறந்த பெறுபேறு

கலை - 2A,B - விமலருகினி

## தமிழ்த்தினப்போட்டி 2016

ஸ்ரீ.ஸ்ரீரம்யா - இலக்கணப்போட்டி கோட்டம்,வலயம் 3ம் இடம்

செ.சிந்தூரி – குறுநாடகம் - கோட்டம் - 1ம் இடம்

வ.பிரியங்கா- திறனாய்வு - கோட்டம 2ம்இடம்,வலயம் 3ம் இடம்

ம.ஆதித்யா – வாசிப்பு - கோட்டம் 1ம்இடம்

இ.தர்சினி - பாவோதல் - கோட்டம்,வலயம் 3ம் இடம்

### தமிழ்த்தினப்போட்டி 2017

ஸ்ரீ.ஸ்ரீரம்யா – கட்டுரை வரைதல்இலக்கியம் நயத்தல் - கோட்டம்1ம்இடம்,

வலயம் 2ம் இடம்.

ர.ரணுஜா - இலக்கணப்போட்டி – கோட்டம் .2ம்இடம்

சி.கஸ்தூரி – சிறுகதை ஆக்கம் - கோட்டம் 3ம் இடம்

இ.தர்சினி – பாவோதல் - கோட்டம்,வலயம் 3ம் இடம்

சி.லக்சிகா – குறுநாடக ஆக்கம்- கோட்டம்,வலயம் 3ம் இடம்

### ஆங்கிலதினப் போட்டி 2016

து.துசாந்தினி – Copy writing கோட்டம் 3ம் இடம்

ச.சாருஜா - Copy writing கோட்டம் 2ம் இடம்

வி.விசாகன் - Recitation கோட்டம் 3ம் இடம்

சை.செரின் Recitation கோட்டம் 1ம் இடம்

சி.துசானிக்கா Recitation கோட்டம் 2ம் இடம்

சி.லக்சிகா Recitation கோட்டம் 2ம் இடம்

சு.நிதர்சன் - Dictation கோட்டம் 3ம் இடம்

ஸ்ரீ.ஸ்ரீரம்யா Dictation கோட்டம் 1ம் இடம்

ர.டிலக்சன் Reading aloud கோட்டம் 3ம் இடம்

சி.சுலக்சனா Reading aloud கோட்டம் 3ம் இடம்

து.சுவர்னா Reading aloud கோட்டம் 1ம் இடம்

ர.காருண்யன் Reading aloud கோட்டம் 2ம் இடம்

உ.ஆர்த்திகன் Story telling கோட்டம் 1ம் இடம்

ர.ரம்சியா Story telling கோட்டம் 2ம் இடம்

து.சுவர்னா Story telling கோட்டம் 1ம் இடம்

ம.அபிநாத் Story telling கோட்டம் 2ம் இடம்

வ.அபிநயா Story telling கோட்டம் 1ம் இடம்

து.சுவர்னா Reading aloud வலயம் 2ம் இடம்

ஆங்கிலதினப் போட்டி 2017

ஆ.கரிகரன் Recitation கோட்டம் 2ம் இடம்

து.சுவர்னா Reading aloud கோட்டம் 3ம் இடம்

சி.கீர்த்தனா Story telling கோட்டம் 2ம் இடம்

ர.ரம்சியா Story telling கோட்டம் 3ம் இடம்

ம.ஆதித்யா Story telling கோட்டம் 2ம் இடம்

து.சுவர்னா Story telling கோட்டம் 1ம் இடம்

சு.நிதர்சன் Dictation கோட்டம் 1ம் இடம்

ஸ்ரீ.ஸ்ரீரம்யா Dictation கோட்டம் 1ம் இடம்

து.துசாந்தினி Copy writing கோட்டம் 3ம் இடம்.

விளையாட்டுப் போட்டி.

க.ஜசிந்தன் நீளம் பாய்தல் வலயம் - 2ம் இடம், மாகாணம் மட்டத்தில் தெரிவாகி தேசியமட்டத்தில் பங்குபற்றினார்.

## பணிக்கூற்று - VISION

மாறி வரும் உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குதல்.
(கிராமத்தின் முன்னணிப் பாடசாலையாகத் திகழச் செய்தல்)

## நோக்கக்கூற்று - MISSION

செயற்றிறன்மிக்க முகாமைத்துவத்தினூடாக பெறக்கூடிய வளங்களை ஒன்றிணைத்து இன்றைய உலகில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதனூடாக சமூக மனப்பாங்கு, நல்லொழுக்கம் முதலிய நற்பண்புகளும், ஆளுமையும் கொண்ட சிறந்த மாணவ சமூகத்தை வளர்த்தெடுத்தல்.

PlotePatric@ gmail-com

# பாடசாலைக் கீதம்

ஞானா சாரியர் கல்லூரி – அன்னை
ஞாலத்தில் வாழிய பல்லூழி
தேனார் துன்னை நல்லூரில்-கலைத்
தேவி அமர்ந்தருளும் கோவில்

(ஞானா)

சைவமும் செந்தமிழும் எங்கும்-அன்னை
சகல கலை மலிந்து பொங்கும்
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்-முன்னை
சமைத்த கலை பயிலரங்கம்

(ஞானா)

துதி பெறும் துன்னை நல்லூரும் -வாழ்வில்
சுகம் பெறும் மாணவர் பல்லோரும்
அதி பராசிரியர் நாமும்-அன்னை
அடி பணிந் திடுவோம் எப்போதும்

(ஞானா)